
# இயற்கையின் மாய உலகம்

ஈ-பிரிட்ஜ் பாலர் பள்ளியில் வினவல்வழிக் கற்றல் முறையின் வாயிலாகப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. பிள்ளைகளின் சிந்தனைத் திறன், சவால்களை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றை வளர்ப்பதே எங்களின் முதன்மையான நோக்கமாகும். மேலும், பிள்ளைகளுக்கு இயல்பாக ஏற்படும் ஆர்வத்தை மேலும் ஊக்குவித்தல், சுயகற்றல், எண்ணப் பிரதிபலிப்புப் போன்ற திறன்களை மேம்படுத்துவதும் மற்ற நோக்கங்களாகும். இந்தக் கற்றல் முறையின் வாயிலாகப் பிள்ளைகள் வினாக்களைக் கேட்டுத் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்கின்றனர்; மற்றவர்களுடன் கலந்துரையாடுகின்றனர். இவ்வாறு அவர்கள் புதிய சொற்களைக் கற்றுக்கொண்டு தங்கள் மொழித்திறனை மேம்படுத்திக்கொள்கின்றனர். தங்களுக்கு ஏற்படும் சவால்களைச் சமாளித்துத் தன்னம்பிக்கையுடன் கற்றலில் ஈடுபடுகின்றனர்.

**ஆசிரியர், பிள்ளைகள் ஆர்வங்கொள்வனவற்றை அறிந்து, அதற்கேற்ப அவர்களின் கவனத்தை ஈர்த்து, ஈடுபாட்டுடன் கற்றுக்கொள்ள வாய்ப்பு அளித்தல்.**

**பிள்ளைகள் தங்களுடைய கற்றலை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தல். தாங்கள் கற்றதை அன்றாட வாழ்க்கையில் செயற்படுத்துதல்.**




**பிள்ளைகள் ஆர்வத்தோடு தங்களின் திறன்களைப் பயன்படுத்திப் புதிய தகவல்களைக் கண்டறிந்து சேகரித்தல்.**

**பிள்ளைகள் தாங்கள் சேகரித்த தகவல்களைச் சரியாகவும் முறையாகவும் ஒருங்கிணைத்தல்.**

**பிள்ளைகள் தாங்கள் சேகரித்து ஒருங்கிணைந்தவற்றை உற்றுநோக்கி ஆழக் கற்றல்.**

# அறிமுகம்

பிள்ளைகளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பல்வேறு வினாக்களைக் கேட்டு அவர்களது சிந்தனையைத் தூண்டி அவர்களுடன் கலந்துரையாடினேன்.

“வண்ண மலர்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது.”



“இந்த இலையில் இரண்டு வண்ணங்கள் உள்ளன.”





“இந்த இலை மென்மையாக இருக்கிறது.”





“இந்தப் பூவின் அருகில் தேனீ ரீங்காரமிடுகிறது.”




“இந்தப் பூவில் உள்ள மஞ்சள் பொடி என் கையில் ஒட்டிக்கொண்டது ஆசிரியர்.”



“ஒரு பூ ஆரஞ்சு நிறம் மற்றொன்று ஊதா நிறம்.”



“இந்த இலை நீளமாக உள்ளது.”



“இந்தக் குச்சியால் நான் வானத்தைத் தொடப் போகிறேன்.”

# கண்டறிதல்


இந்நிலையில் பிள்ளைகள் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தித் தம் நண்பர்களுடன் இணைந்து கதையை உருவாக்கக் கற்றுக்கொண்டார்கள். இதன் வழியே அவர்களின் மொழிவளம் மேம்பட்டது.

**பிள்ளைகள் தாங்கள் சேகரித்த பொருள்களால் கலைப்படைப்புகளை உருவாக்கினர்.**





















**கலைப்படைப்புகளைக்கொண்டு "சுற்றுலா செல்வோம்" என்னும் தலைப்பில் கதை உருவாக்கினர். இது அவர்களின் கற்பனை வளத்தையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தியது.**

# ஒருங்கிணைத்தல்

பிள்ளைகள் தாவரப் பாகங்களின் செயற்பாடுகளை அறிந்துகொள்ள அறிவியல் சோதனைகளை மேற்கொண்டு சேகரித்த தகவல்களை ஒருங்கிணைத்தனர். இவை அவர்களைப் புத்தார்வமும் அறிவார்வமும் கொள்ளச் செய்தன.



பிள்ளைகள் “விதை, செடி, மரம்” என்ற விளையாட்டை விளையாடினார்கள்.

பிள்ளைகள் விதையை மண்ணுக்குள் புதைத்து வைத்து, நீர் ஊற்றினால் என்ன ஆகும் என்று செய்து பார்த்தார்கள்.










தண்டின் பணியை அறிந்துகொள்வதற்காகப் பிள்ளைகள் வண்ணச்சாயத்தில் பூக்களைத் தண்டுடன் வைத்தனர். சிறிது நேரத்தில் வெள்ளைநிறப் பூக்களின் வண்ணம் மாறியதைக் கண்டு வியந்தார்கள்.









# ஆழக் கற்றல்

பூக்களால் என்ன செய்யலாம் என்பதைக் கண்டறிய பிள்ளைகள் முற்பட்டார்கள். அவர்கள் பூக்களை மோந்து பார்த்தல், பூச்சரம் கட்டுதல், பூக்களைக்கொண்டு துணியில் சாயம் ஏற்றுதல், பூக்கடைக்குக் கற்றல் பயணம் செல்லுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.




பூமாலை கட்டுவது எப்படி?




பூக்கடையில் என்ன பூக்கள் இருக்கும்?



பூவிலிருந்து அதன் மணத்தைப் பிரித்து எடுக்க முடியுமா?




பூக்களைக்கொண்டு துணிகளில் சாயம் ஏற்ற முடியுமா?



பூக்கள் எளிதில் காய்ந்து விடுகின்றன. அவற்றை எவ்வாறு பாதுகாப்பது?



# மீள்நோக்குதலும் செயற்படுத்துதலும்



பிள்ளைகள் கற்றுக்கொண்டவற்றைக்கொண்டு மற்றவர்களுக்குப் பயன் தரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.





உலர்ந்த வண்ணப் பூக்களைக்கொண்டு பிள்ளைகள் வாசனைக் கற்கள் செய்து அவற்றைத் தம் நண்பர்களுக்குப் பரிசளித்தனர்.





வாசனைக் கற்கள், மணல், பூக்கள் முதலியவற்றைக்கொண்டு அழகிய பூந்தோட்டத்தை உருவாக்கினார்கள்.







